செ. கு. எண் ; 28 29/6/09

# முதுபெரும் பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியம் மறைவு

# முதலமைச்சர் கலைஞர் இரங்கல்.

பேராசிரியர், முனைவர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் இன்று காலை இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். பேராசிரியர் வ.ஐ. சுப்பிரமணியம் அவர்கள் செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் துணைத் தலைவர்களில் ஒருவராக விளங்கி வந்தார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் துணை வேந்தராகவும், திராவிடப் பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராகவும் விளங்கியவர் அவர். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை உருவாக்கிட அடித்தளமிட்டவர். திராவிட மொழியியல் பள்ளியை திருவனந்தபுரத்தில் நிறுவினார். முரசொலி அறக்கட்டளை யின் சார்பில் கலைஞர் விருதினைப் பெற்றவர். உலக அளவில் தமிழ் மொழியின் பெருமையை உரியவாறு வெளிப் படுத்தியவர். தேர்தல் களத்தில் கூட தமிழர் நாகரிகமும், பண்பாடும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற அக்கறையோடு அறிக்கை விட்ட பண்பாளர்களில் ஒருவர். திராவிட மொழியியல் ஆய்வினை உலக அரங்கிற்குக் கொண்டு செல்லும் முயற்சியில் இடைவிடாது பணியாற்றி வந்தவர். அவரது மறைவு தமிழ் ஆய்வுக்கும், தமிழ் வளர்ச்சிக்கும் ஈடு செய்ய இயலாத இழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்திற்கும், நண்பர் களுக்கும் தமிழ்ப் பற்றாளர்களுக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

.............................................................................................

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9